

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 76 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஐப்பசி 08 – வெள்ளிக்கிழமை 25 அக்டோபர் 2024 – சென்னை 16+12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 76 : Thiruvalluvar Year - 2055 - Ayppasi 08 - Friday 25 October 2024 - Chennai 16+12 Pages ₹ 5.00


# களஆய்வு தொடங்கும்.. சாதனைத் திட்டங்கள் தொடரும்..



**நம் உயிருடன் கலந்திருக்கும் தலைவர் கலைஞர் அவர்களின் அன்பு உடன்பிறப்புகளுக்கு ‘உங்களில் ஒருவன்’ எழுதும் மடல்.**

‘மக்களிடம் செல்... அவர்களுடன் வாழ்...’ என்று நமக்கு பொது வாழ்க்கைக்கான பாடம் கற்றுத் தந்தவர் பேரறிஞர் அண்ணா. அந்த அண்ணாவின் அன்புத் தம்பியாக, அவர் உருவாக்கிய ‘திராவிட முன்னேற்றக் கழகம்’ எனும் அரசியல் பேரியக்கத்தை அரை நூற்றாண்டு காலத்திற்கு வழிநடத்திய முத்தமிழறிஞர் கலைஞரும் அதைத்தான் நமக்கு கற்றுத் தந்திருக்கிறார். கழகம் ஆளுங்கட்சியாக இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும் எப்போதும் மக்களிடம் சென்று, மக்களுடன் நிற்கின்ற இயக்கமாகும்.

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கான தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக அமெரிக்கப் பயணம் மேற்கொள்வதற்கு முன்பாகவே நமது ‘திராவிட மாடல்’ அரசின் அமைச்சர்களிடம் அவரவர் துறை சார்ந்த ஆய்வுகளை மேற்கொண்டும், அவரவர் மாவட்டங்களில் உள்ள பணிகள் குறித்த ஆய்வுகளை மேற்கொண்டும் அறிக்கை தயாரித்து வைக்குமாறு கேட்டுக்கொண்டேன். அதுபோலவே, அமைச்சர்கள் பலரும் அறிக்கைகளை அளித்திருந்தனர். அதனை நானும் துணை முதலமைச்சரும் மூத்த அமைச்சர்களும் பார்வையிட்டு, பத்தாண்டுகால அ.தி.மு.க ஆட்சியில் முடங்கிப் போயிருந்த தமிழ்நாட்டின் வளர்ச்சி மற்றும் உள்கட்டமைப்பினை மேம்படுத்த மாவட்டவாரியான ஆய்வுகளுக்குத் திட்டமிட்ட நிலையில், பருவ மழைக்காலம் தொடங்கிவிட்டது.

இந்த ஆண்டு வடகிழக்குப் பருவ மழையின் தொடக்கத்திலேயே சென்னை உள்ளிட்ட தமிழ்நாட்டின் பல பகுதிகளில் கனமாகப் பெய்த நிலையில், முதலமைச்சரான உங்களில் ஒருவனான நானும், துணை முதலமைச்சர் உள்ளிட்ட அமைச்சர்களும் நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்களும், மேயர் - சேர்மன் - உள்ளாட்சி மன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைத்து மக்கள் பிரதிநிதிகளும் அரசு நிர்வாகத்தினரும் இரவு பகல் பாராமல் களத்தில் நின்று மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படாமல் பணியாற்றியதை ஊடகங்களும், திராவிட மாடல் அரசின் பணியை நேரில் பார்த்த பொது மக்களும் பாராட்டுகின்றனர்.

## உங்களில் ஒருவன்

பருவ மழை தொடர்கின்ற நிலையில், மழை நீர் தேங்குகிற இடங்களில் உடனே அவற்றை வடியச் செய்வது, போக்குவரத்துக்கும் அத்தியாவசியத் தேவைக்கும் பாதிப்பின்றி உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்வது உள்ளிட்ட





**மழைக்கால நிவாரணப் பணிகள் திறம்பட நடைபெற்று வரும் நிலையில், இதனைப் பொறுக்க முடியாமலும், தாங்கள் அரசியல் செய்வதற்கு எதுவும் கிடைக்காததாலும் எதிர்வரிசையிலே இருப்பவர்கள், அதிலும் தங்களுடைய பத்தாண்டு கால மோசமான ஆட்சிக்காலத்தில், கடைசி நான்கு ஆண்டுகளில் படுமோசமான நிர்வாகம் நடத்தியவர்கள், மக்கள் மீதான அக்கறையுடன் செயல்படும் திராவிட மாடல் அரசு மீது அடிப்படையில்லாத அவதூறுகளைப் பரப்ப முனைந்து, அதிலும் முனை முறிந்து போயிருக்கிறார்கள்.**

பொதுவாழ்வில் விமர்சனங்கள் சர்வ சாதாரணம்தான் என்பதால் எதிர்த்தரப்பின் ஆதாரமற்ற விமர்சனங்களைக் கடந்து, திராவிட மாடல் அரசு தனது மக்கள் நலப் பணிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாகத்தான் அக்டோபர் 22-ஆம் தேதியன்று நாமக்கல் மாவட்டத்தில் பல்வேறு நலத்திட்டங்களைத் தொடங்கி வைப்பதற்காக சேலத்திற்குச் சென்றேன். அமைச்சரவையில் புதிதாக இடம் பெற்றிருப்பவரும் மாவட்டக் கழகச் செயலாளருமான இராஜேந்திரன், நாடாளுமன்ற உறுப்பினரும் மேற்கு மாவட்டச் செயலாளருமான திரு. செல்வகணபதி, கிழக்கு மாவட்டச் செயலாளர் திரு. சிவலிங்கம் உள்ளிட்ட கழக மூத்த முன்னோடிகள் வரவேற்றனர். அங்கிருந்து நாமக்கல் நோக்கிப் பயணித்தேன்.

நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் கே.ஆர்.என்.ராஜேஸ்குமார் எம்.பி., சிறப்பான ஏற்பாடுகளை செய்திருந்தார். மாநிலங்களவை உறுப்பினராக இருப்பவர் தனக்குரிய தொகுதி மேம்பாட்டு நிதியினை மாநிலம் முழுவதும் பயன்படுத்தும் வாய்ப்பு கொண்டவர். எனினும், அவருக்குத் தமிழ்நாடு என்றால் நாமக்கல்தான். மண்ணின் மைந்தர் என்ற முறையில் எப்போது

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

### திறமையான விளையாட்டு வீரர்களை உருவாக்கி வருகிறார் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின்!

# தமிழ்நாடு விளையாட்டுத் துறையில் உலகத்தையே ஈர்த்துள்ளது!

## “முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் – 2024” நிறைவு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை, அக். 25 -**

**“தமிழ்நாடு விளையாட்டுத் துறையில் உலகத்தையே ஈர்க்கிறது” என்றும், திறமையான விளையாட்டு வீரர்களை உருவாக்கி வருகிறார் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள்” என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் “முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் பாட்டிகள் - 2024” நிறைவு விழாவில் உரையாற்றும்போது பெருமிதத்துடன் கூறினார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.10.2024) சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கில் “முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் – 2024” நிறைவு விழாவில் ஆற்றிய உரை வருமாறு:

முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று அதில் வெற்றிபெற்ற எல்லா வீரர்களுக்கும் பரிசுகள் வழங்கக்கூடிய இந்த சிறப்பான நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருப்பது உள்ளபடியே பெரும் மகிழ்ச்சியளிக்கிறது. அதில் குறிப்பாக உங்கள் முகங்களையெல்லாம் பார்க்கின்ற நேரத்தில் அதிகமான உற்சாகத்தையும், மகிழ்ச்சியையும் நான் பார்க்கிறேன். உங்கள் துறையின் அமைச்சர் ப்ரமோஷன் அடைந்தது உங்களுக்கு எல்லாம் புது எனர்ஜியைக் கொடுத்திருப்பதாகத்தான் நான் பார்க்கிறேன்!




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (24.10.2024) சென்னை, ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டரங்கத்தில் நடைபெற்ற “முதலமைச்சர் கோப்பை–2024” மாநில அளவிலான போட்டிகள் நிறைவு விழாவில், அதிக பதக்கங்களை வென்று பதக்கப் பட்டியலில் முதலிடத்தை பெற்ற சென்னை மாவட்ட அணியின் சார்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ரஷ்மி சித்தார்த் ஜகடே, விளையாட்டு வீரர்–வீராங்கனைகள், மண்டல முதுநிலை மேலாளர் மற்றும் மாவட்ட விளையாட்டு அலுவலர் ஆகியோர் கோப்பையை பெற்று கொண்டார்கள். இந்த நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, அமைச்சர் பெருமக்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**இந்தியாவே உற்றுநோக்கும் துறையாக வளர்ந்துள்ளது!**

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சராக இருந்த தம்பி உதயநிதி அவர்கள், இப்போது துணை முதலமைச்சர் ஆனதில் உங்களுடைய பங்கும் இருக்கிறது என்பதை நான் தெளிவாக உணர்ந்திருக்கிறேன். விளையாட்டுத் துறையை மிகச் சிறப்பாக கவனித்து, இந்தியாவே உற்றுநோக்கும் துறையாக தம்பி உதயநிதி மாற்றிக் காட்டியிருக்கிறார்! அப்படி பார்த்தால், துறையும் வளர்ந்திருக்கிறது. துறையின் அமைச்சரும் வளர்ந்திருக்கிறார்!

நாம் ஆட்சிப்பொறுப்பேற்ற பிறகு, விளையாட்டை பொழுதுபோக்காக நினைக்கும் ’மைண்ட்செட்’-ஐ மாற்றி, ஸ்போர்ட்சில் ஒரு ’கேரியராக’ இளைஞர்கள் தேர்ந்தெடுக்கும் அளவிற்கு முக்கியத்துவம் கொடுத்து ப்ரொமோட் செய்து இருக்கிறோம்! அதனால்தான், இந்திய வரலாற்றில் முதன்முறையாக, தமிழ்நாட்டில் 114 கோடியே 39 இலட்சம் ரூபாய் செலவில், 44-வது செஸ் ஒலிம்பியாட் போட்டிகளை சிறப்பாக நடத்தினோம். 186 நாடுகளிலிருந்து, இரண்டாயிரத்திற்கும் அதிகமான வீரர் - வீராங்கனைகள் அந்தப் போட்டியில் பங்கேற்றார்கள்!

வெளிநாடுகளிலிருந்து வந்திருந்த செஸ் வீரர்களுக்கெல்லாம், நாம் அளித்த வரவேற்பு - குறுகிய காலத்தில் போட்டிகளை சிறப்பாக ஏற்பாடு செய்த முறை - தமிழ்நாடு அரசும் - தமிழ்நாட்டு மக்களும் அவர்களுக்குக் கொடுத்த விருந்தோம்பல் என்று எல்லாவற்றையும் மனதாரப் பாராட்டினார்கள்! அந்த செஸ் போட்டியின் துவக்க விழாவும் - நிறைவு விழாவும் - சோஷியல் மீடியாக்களில் வைரலானது.

தமிழ்ப் பண்பாட்டை உலகிற்கு எடுத்துக் காட்டும் வாய்ப்பாக அது அமைந்தது. அதே போன்று, “சென்னை ஓபன் WTA உலக டென்னிஸ் சாம்பியன்ஷிப் 2022” போட்டி, ஸ்குவாஷ் உலகக்கோப்பை 2023, ‘சென்னை செஸ் கிரண்ட்மாஸ்டர் 2023’ உள்ளிட்ட ஏராளமான போட்டிகளை எல்லோரும் பாராட்டும்படி நடத்தியிருக்கிறோம்! இது போன்று நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகள், தமிழ்நாட்டு விளையாட்டு வீரர்களை உற்சாகப்படுத்துகிறது. பலரையும் அந்த விளையாட்டுகளை நோக்கி ஈர்க்கிறது. தொழில் முறை விளையாட்டு வீரர்கள் உருவாக ஊக்கமளிக்கிறது.

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்